[9th September 1970

திரு. ஜி. சுவாமிநாதன் : நம் மாநிலத்திற்கும் மைசூர் மாநிலத்திற்குமிடையே காவிரி நீர்ப் பங்கீடு சம்பந்தமான வகையில் இருக்கும் பிரச்னை காரணமாக உலக வங்கி கொடுக்க இருக்கும் இந்த 40 கோடி ரூபாய் பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பாதிக்காது என்று தான் நாங்கள் கருதுகிறோம். பாதிக்கப்படக் கூடாது என்று தான் நாங்கள் விரும்புகிறோம்.

Superintending Engineers

*97. *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the number of vacancies of Superintending Engineers in Highways and Rural Works Department that have not been filled as on date ;

(*b*) the period for which they are kept vacant ; and

(*c*) the reason therefor ?

மேற்பார்வைப் பொறியாளர் பதவிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இந்நாள் வரை நெடுஞ்சாலைகள்-கிராமப் பணித்துறையில் நிரப்பப்படாமலுள்ள மேற்பார்வைப் பொறியாளர் பதவிகள் எண்ணிக்கை என்ன ?

(இ) அவை எவ்வளவு காலமாகக் காலியாக உள்ளன ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) மூன்று.

(இ) மேற்பார்வைப் பொறியாளர் கோயம்பத்தூர் மாவட்டம்: 1-1-70 முதல் 2-7-70 பிற்பகல் வரை.

மேற்பார்வைப் பொறியாளர், (இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சென்னை) : 9-1-70 முதல் 17-6-70 பிற்பகல் வரை.

மேற்பார்வைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி : 10-5-70 முதல் 18-6-70 பிற்பகல் வரை.

(உ) 1970 பிப்ரவரியிலும், 1970 ஏப்ரலிலும் இந்த மேற்பார்வைப் பொறியாளர் பதவிகளை நிரப்புவதற்கான செயற்குறிப்புகளைத் தலைமைப் பொறியாளர் பணிந்தனுப்பினர். முகமையிலனுப்பப்பட்ட (on deputation) வேறு பணியிலிருந்து இத்துறை அதிகாரிகளிடமிருந்து தம்மைத் தாய்த்துறைக்குத் திரும்ப அனுப்புமாறு வேண்டிக் கொண்டு அனுப்பப்பட்ட முறையீடுகளுடன் சேர்த்து அச்செயற்குறிப்புகள் பரிசீலனையில் இருந்தன. இதில் ஏற்பட்ட காலதாமதம் நிர்வாகக் காரணங்களால் விளைந்ததாகும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மேற்பார்வைப் பொறியாளர் பதவி போன்ற மிகப் பொறுப்பு வாய்ந்த பதவிகள் கிட்டத்தட்ட 6, 7 மாதங்களாக நிரப்பப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் ? இது போன்று காலியாகும் பெரிய பதவிகளை உடனடியாக நிரப்ப இனியாவது அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, நிர்வாகக் காரணங்கள்தான் கால தாமதத்திற்குக் காரணம். ஆனால் இந்தப் பதவியைப் பொறுத்த வரையில் ''அடிஷனல் சார்ஜ் அரேன்ஜ்மெண்ட்'' செய்து பார்த்து வரப்பட்டது. இப்போது அந்த ஸ்தானங்களையெல்லாம் உடனடியாக நிரப்பியிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : இனிமேலாயினும் இம்மாதிரிப் பதவிகளில் ''வேகன்சி' ஏற்படும் சமயத்தில், அடுத்த சீனியர் டிவிஷனல் என்ஜினீயரையே சூப்பரண்டிங் என்ஜினீயராக நியமித்து, வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்கு உரிய முறையில், அந்தப் பதவிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தாவது, அரசு ஏற்பாடு செய்ய முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அடுத்து இருக்கிற சீனியர் என்ஜினீயரைப் போட்டு அந்த இடத்தை நிரப்ப முடியாது. காரணம் அதற்காக ஒரு 'பேனல்' தயார் செய்ய வேண்டும். 'பேனல்' தயார் செய்த பிறகு, அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். பரிசீலனைக்குப் பிறகுதான் அரசாங்கம் அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையெல்லாம் கவனித்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இனிமேலும் எடுத்துக்கொள்ளும் என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Bridge across the Coleroon

*98. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the designs and estimates for the bridge which is being constructed across the Coleroon near Thirumanur village in Trichy district were prepared by the Government Engineers or by the contractors ;

(*b*) the number of spans on the bridge and height and the width of the bridge ; and

(*c*) the total estimate of expenditure ?

கொள்ளிட நதியின் குறுக்கே கட்டப்படும் பாலம்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சி மாவட்டம் திருமானூர் கிராமத்திற்கு அருகில் கொள்ளிட நதியின் குறுக்கே கட்டப்படும் பாலத்திற்கு டிசைனும் மதிப்பீடும் தயாரித்தவர்கள் அரசாங்கப் பொறியாளர்களா அல்லது ஒப்பந்தக்காரரா ?

(இ) பாலத்தின் தூண்கள் எத்தனை ? உயரம் எத்தனை ? மேல் பரப்பின் அகலம் என்ன ?

(உ) மொத்த மதிப்பீடு தொகை எவ்வளவு ?